பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 29 திங்கட்கிழமை 16.10.2023 அதிர்வு 77

## சந்தேகநபர் ஒருவர் சுட்டுப் படுகொலை!



பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்தார். 04▶

## நான் எப்போதும் பலஸ்தீன மக்கள் பக்கமே

# போர் தீர்வு அல்ல

### அந்நாட்டுத் தூதுவருடனான சந்திப்பில் மஹிந்த தெரிவிப்பு



இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் அதிகரித்து வரும் மோதல்களுக்கு மத்தியில் பலஸ்தீன மக்களுடன் ஐக்கியமாக நிற்கும் முகமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று கொழும்பில் உள்ள பலஸ்தீன தூதரகத்துக்கு விஜயம் செய்தார். 04▶

## கைதான மீனவர்களை உடனடியாக விடுவிக்குக!

### இராமேஸ்வரத்தில் போராட்டம்



- மன்னார் நிருபர் -

இலங்கையில் கைது செய்யப்பட்ட 27 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி எதிர்வரும் 04▶

## தனக்கு தானே தீ மூட்டிக் கொண்ட போதைப்பொருள் பாவனையாளர்

### காப்பாற்றச் சென்ற இரு பொலிஸாரும் எரிகாயங்களுடன் வைத்தியசாலையில்

- அஸ்ஹர் இப்றாஹிம் -

மட்டக்களப்பு, வாழைச்சேனை – மாஞ்சோலை பாடசாலை வீதியில் அமைந்துள்ள வீடொன்றில், தனக்குத் தானே தீ வைத்துக்கொண்டார் எனக் கூறப்படும் 04▶



# யாழ். நாவற்குழியில் மனைவியை அடித்துக் கொலை செய்த கணவன்

### ஓட்டோவில் தப்பியோட முயன்ற வேளை கைது





- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் – நாவற்குழிப் பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவரின் சடலம் இன்று காலை வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

மனைவியைக் கொலை செய்து விட்டு ஓட்டோவில் தப்பிச் செல்ல முற்பட்டார் என்ற சந்தேகத்தில் அவரின் கணவன் பொலிஸ் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டார். 04▶

### யாழ். சந்தைகளில் நடைமுறையிலுள்ள

# 10 வீதக் கழிவு நடைமுறைகளை நிறுத்தி சம்பந்தப்பட்டோரைக் கைது செய்யுங்கள்!

### விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பொலிஸாருக்கு உத்தரவு

யாழ். மாவட்டத்தின் சந்தைகளில் நடைமுறையில் உள்ள 10 வீத கழிவு கட்டண அறவீடு நடைமுறையை உடனடியாக நிறுத்தி இதனுடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட விவசாய குழு கூட்டம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த விவசாயக் குழு கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநரால் யாழ். மாவட்டத்தில் சில சந்தைகளில் விவசாயிகளிடமிருந்து 10 வீத கழிவு அறவிடும் நடைமுறை செயற்படுத்தப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாகத் திருநெல்வேலி, மருதனார்மடம், சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் இந்த விவசாயிகளிடம் கழிவு அறவிடும் நடைமுறை இடம் பெற்று வருகின்றது. இந்தச் சந்தைகளில் விவசாயிகள் அச்சுறுத்தப்பட்டு அவர்களிடம் இந்த கழிவு அறவிடப்படுகின்றது.

எனவே விவசாயிகள் இது தொடர்பில் முறைபாட்டைப் பதிவு செய்வதில் தயக்கம் காட்டுவார்கள். எனவே பொதுவான தீர்மானமாக பொதுவான முறைப்பாடாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.



இதனால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றார்கள். இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இதன்போது அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் இதனை தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த கூட்டத்தின் தீர்மானமாக 10 வீதக் கழிவு அறவிடும் நடைமுறையை நிறுத்த கோரிய முறைப்பாடு முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதோடு குறித்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு விவசாய அமைச்சர் உத்தரவிட்டார்.

அத்தோடு குறித்த சம்பவத்தைப் பொலிஸாரால் மாத்திரம் தடுத்து நிறுத்த முடியாது. இதற்குப் பிரதேச செயலர்கள், கிராம சேவகர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கழிவு நடைமுறை தொடர்பிலான சகல தகவல்களையும் பொலிஸாருக்கு வழங்கினால் பொலிஸாரால் அதனைக் கட்டுப்படுத்தி சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கு இலகுவாக இருக்கும் எனவும் வடக்கு ஆளுநர் இதன்போது கருத்துத் தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் பிரதேச சபைகள் சந்தைகளை குத்தகைக்கு கொடுக்கும்போது இந்த கழிவு நடைமுறை அமுல்படுத்த கூடாது என்ற நிபந்தனையும் பின்பற்றிய வழங்க வேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்ட அரச அதிபர் , மாகாண பணிப்பாளர்கள், பிரதேச செயலர்கள், துறை சார் திணைக்கள தலைவர்கள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்,

# யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பிறந்தநாள் கொண்டாடியோரைக் கைது செய்ய உத்தரவு!

### இரண்டு பேர் கைதாகி விளக்கமறியல்

யாழ். பஸ் நிலையத்தில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்து, அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாகப் பிறந்த நாள் கொண்டாடிய கும்பலை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் யாழ்.நீதிவான் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பஸ் நிலையத்துக்கு 50 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த 150 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் அண்மையில் ஒன்று கூடி தங்களில் ஒருவரின் பிறந்தநாளைக் கேக் வெட்டிக் கொண்டாடியுள்ளனர். அதனை டிக்டாக் போன்ற சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தும் உள்ளனர்.

பிறந்தநாள் கொண்டாடிய இளைஞர்களின் செயற்பாடானது வீதியில் சென்ற மற்றும் பஸ் நிலையத்தில் இருந்தவர்கள் மத்தியில் அச்சத்தை




ஏற்படுத்தும் விதமாக இருந்தது என்று யாழ். பொலிஸாருக்குத் தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்ட போதிலும் பொலிஸார் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகர் மத்தியில் சன நெருக்கடியான நேரத்தில் சட்டவிரோதமான முறையில் ஒன்றுகூடி பிறந்தநாள் கொண்டாடியுள்ளனர். அது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்காதது தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்து இருந்தனர்.

இந்த நிலையில், மக்களின் இயல்வு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இருவரைக் கைது செய்து சனிக்கிழமை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தி இருந்தனர்.

அவர்களைப் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், சம்பவத்துடன் தொடர்புடைய பிறந்தநாளுக்கு உரியவர் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்து முற்படுத்த வேண்டும் என்று பொலிஸாருக்குப் பணித்துள்ளார்.

அனைவரையும் கைது செய்வதற்கான தீவிர நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# புதிய வாடிக்கையாளரை இணைக்க சமுர்த்தி சேமிப்பு மேம்பாட்டுத் திட்டம்

(ரஸீன் ரஸ்மின்)

"இன்றைய சேமிப்பு, நாளைய உங்கள் முதலீடு" எனும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம் ஒன்றை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

புதிய வாடிக்கையாளர்களை இணைத்துக் கொண்டு, வைப்புத் தொகையை அதிகரிக்கும் நோக்கில் சேமிப்பு மேம்பாட்டு திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக சமுர்த்தி அபிவி ருத்தி திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி, இம்மாதம் முதலாம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இந்த சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சமுர்த்தி வங்கிகளிலுள்ள அங்கத்தவர் சேமிப்பு கணக்கு, அங்கத்தவர் அல்லாதோர் சேமிப்பு கணக்கு, திரியமாதா (பெண்கள்) சேமிப்பு கணக்கு, சிறுவர் , சிசுரக சேமிப்பு கணக்கு மற்றும் ஐவரைக் கொண்ட குழு சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் பயனாளிகளிடமிருந்து பணத்தை சேமிக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், சேமிப்பு செய்யும் அனைவருக்கும் பரிசுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. சிறுவர் மற்றும் சிசுரக கணக்குகளுக்கு 500 ரூபாவுக்கு கூடுதலாக வைப்புச் செய்யும் பயனாளிகளுக்கு பொருத்தமான பரிசு வழங்கவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர், அங்கத்தவர் அல்லாதோர் மற்றும் திரியமாதா ஆகிய கணக்குகளுக்கு 1000 ரூபாவுக்கும் மேல் சேமிப்பு செய்யும் பயனாளிகளுக்கும், குழுக்களுக்கு 2500 ரூபா அல்லது அதற்கு மேல் சேமிப்பு செய்யும் குழுக்களுக்கும் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

## மணற்சேனை மயானத்தில் துப்புரவுப் பணிகள்

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் சேவை விநியோக மேம்பாடு திட்டத்தின் கீழ் மணற்சேனை மயானத்தை துப்பரவு செய்யும் வேலைத் திட்டம் இன்று (16) உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

நீண்ட காலமாகத் துப்பரவு செய்யப்படாமல் பற்றைக் காடாகக் காணப்பட்ட இம்மயானமானது மாநகர சபை ஊழியர்களினால் மிகவும் அர்ப்பணிப்புடன் துப்பரவு செய்யப்பட்டு, கழிவுகள் யாவும் திண்மக் கழிவகற்றல் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டுள்ளன.

மாநகர சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களான எம்.அமீர், எம்.எம்.நிஸார் மற்றும் மேற்பார்வையாளர்கள் துப்பரவுப் பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர்.

இதற்கு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் வி. சந்திரன் உள்ளிட்ட குழுவினரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியால் விஷேட கருத்திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ள கல்முனை மாநகர சபையின் சேவை விநியோக மேம்பாடு எனும் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி வாரம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

தினமும் ஒவ்வொரு மயானம் என்ற அடிப்படையில் துப்பரவு செய்யும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத் திட்டம் கல்முனை தமிழ் பிரிவு இந்து மயானத்தில் ஆரம்பிக்கப்பட்டு, கல்முனைக்குடியில் நூராணியா மையவாடி, மருதமுனையில் அக்பர் மையவாடி, சாய்ந்தமருதில் தக்வா மையவாடி என்பனவும் சிறந்த முறையில் துப்பரவு செய்யப்பட்டுள்ளன.







## ராமகிருஷ்ண மிஷனில் நவராத்திரி விழா

(வி.ரி. சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரமத்தில் நவராத்திரி விழா கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கொலு பொம்மைகள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இத்துடன் சப்தமி தினத்து அன்று அபிராமி அந்தாதி பாராயணம் நடைபெற உள்ளது. அஷ்டமி தினமாகிய ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் விசேட பூஜைகள் நடைபெறும், அன்று மாலை நலங்களை சேர்க்கும் திரு விளக்குப் பூஜை நடைபெற உள்ளது. நவமி தினமாகிய திங்கட்கிழமை மாலை லலிதா சகஸ்ரநாம பாராயணம் நடைபெறும், வழமை போல தசமி தினத்தன்று மாணவர்களுக்கு ஏடு தொடக்கும் வைபவம் நடைபெறும்.

## 8 வயது சிறுமியை வன்புணர்ந்த 15 வயது சிறுவன் ஒருவன் கைது!

புத்தளம் – ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் 8 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் 15 வயது சிறுவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவனை ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பங்கதெனிய – கொட்டபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் தரம் 8 இல் கல்வி கற்கும் இந்தச் சிறுவனால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக, சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வன்கொடுமைக்கு உள்ளானார் என்று கூறப்படும் சிறுமி, மருத்துவ பரிசோதனைக்காக சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சிறுவனை சிலாபம் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## சந்தேக நபர் ஒருவர்...

கந்தானையில் இடம்பெற்ற பல குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபரே இவ்வாறு சாவடைந்தார்.

சப்புகஸ்கந்த பிரதேசத்தில் வைத்து 49 வயதுடைய அந்த நபரை நேற்றிரவு பொலிஸார் கைது செய்ய முற்பட்டனர்.

அதன்போது பொலிஸாருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச் சூட்டில் அந்த நபர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தானை - பொல்பித்திமுகலான பகுதியில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## யாழ். நாவற்குழியில்...

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நாவற்குழி, ஐயனார் கோயிலடியில் வசிக்கும் அஜந்தன் யமுனா என்கின்ற 23 வயதான இரண்டு பிள்ளைகளின் தாய் கொலை செய்யப்பட்ட நிலையில் இன்று காலை அவரின் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில், வீட்டில் கணவனைக் காணாத நிலையில் பொலிஸாரின் சந்தேகம் வலுத்தது.

குடும்பத் தகராறில் கணவரால் அந்தப் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதிய பொலிஸார் கணவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவினரும் சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் அதிரடியாகக் களமிறங்கினர்.

இதன்போது யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையில் ஓட்டோவில் சந்தேக நபர் தப்பிக்க முற்பட்ட வேளையில் பொலிஸ் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

"நான் மனைவியைத் தாக்கினேன். மனைவி உயிரிழந்தமை எனக்குத் தெரியாது" - என்று சந்தேகநபர் வாக்கு மூலம் வழங்கினார்.

இதையடுத்து சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காகச் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## தனக்கு தானே...

ஒருவரைக் காப்பாற்ற முற்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தீ வைத்துக்கொண்ட நபர் தாக்கியுள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது தீக்காயங்களுக்குள்ளான வாழைச்சேனை பொலிஸ் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் 38 வயதுடைய நபரும் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் வாழைச்சேனை மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மத்திய கிழக்கு நாட்டில் பணிபுரியும் தனது மனைவியைப் பணம் அனுப்புமாறு வற்புறுத்தியதன் காரணமாக இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி 38 வயதுடைய நபர் தனது உடலுக்கு தீ வைத்துள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்றும், அவர் போதைப்பொருள் பாவனையாளர் என்றும் வாழைச்சேனை பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## போர் தீர்வு அல்ல...

இலங்கைக்கான பலஸ்தீனத் தூதுவருடனான கலந்துரையாடலின்போது, உலகில் எங்கும் பயங்கரவாதத்துக்கு இடமில்லை என்றும், போர் தீர்வு அல்ல என்றும் மஹிந்த தெரிவித்தார்.

போரில் இலங்கையின் அனுபவங்களைக் குறிப்பிட்ட மஹிந்த, சமாதானத்தின் அவசரத்தை வலியுறுத்தினார்.

"பலஸ்தீனத்துடனான ஒற்றுமைக்கான இலங்கை சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் என்ற முறையில் நான் பலஸ்தீன நோக்கத்தை தொடர்ந்து ஆதரித்து வருகின்றேன். போர் ஒரு தீர்வாகாது." - என்று மஹிந்த மேலும் கூறினார்.

மஹிந்த, ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியிலும் இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்தில் பலஸ்தீனத்துக்கான ஆதரவையே வெளிப்படுத்தியிருந்தார்.

பலஸ்தீனத்துக்கு பத்து இலட்சம் அமெரிக்க டொலர்கள் நிதி உதவியையும் மஹிந்த 2014ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் வழங்கியிருந்தார்.

பலஸ்தீனத்தின் நீண்டகால ஆதரவாளராக மஹிந்த இருந்து வருவதோடு பலஸ்தீன கூட்டொருமைப்பாட்டுக்கான இலங்கை சங்கத்தின் ஸ்தாபகத் தலைவராகவும் அவர் செயற்படுகின்றார்.

பலஸ்தீனத்தைஒருதேசமாக1988ஆம் ஆண்டு இலங்கை அங்கீகரித்ததுடன் 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பலஸ்தீனத்தில் 'மஹிந்த ராஜபக்ஷ வீதி' என ஒரு வீதிக்கு பெயரிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





## கைதான மீனவர்களை...

18 ஆம் திகதி பாம்பன் சாலை பாலத்தை முற்றுகையிட்டு சாலை மறியல் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம் என்றும் இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"இராமேஸ்வரம் மண்டபம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மீன் பிடிப்பதற்கான அனுமதி சீட்டைப் பெற்று சுமார் 500 இற்கும் மேற்பட்டோர் விசைப்படகுகளில் கடலுக்குச் சென்றனர்.

இந்தநிலையில் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதிக்கு ரோந்து வந்த இலங்கை கடற்படை மூன்று விசைப் படகுகளையும் அதிலிருந்து 12 மீனவர்களையும் கைது செய்தது.

அதைபோல் தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே மீன்பிடித்து கொண்டிருந்தபோது இரண்டு விசைப் படகுகளையும் அதிலிருந்து 15 மீனவர்களையும் கைது செய்த கடற்படை, அவர்களைக் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றது.

இந்தநிலையில் ஐந்து விசை படகுகளையும், 27 மீனவர்களையும் விடுதலை செய்யவேண்டும், அதேபோன்று இலங்கை நீதிமன்றத்தால் டுதலை விடுவிக்கப்பட்ட இராமேஸ்வரம், ஜெகதாப் பட்டினத்தைச் சேர்ந்த 9 படகுகளை மத்திய அரசு மீட்டு கொடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் 18ஆம் திகதி பாம்பன் சாலை பாலத்தின் நடுவில் முற்றுகையிட்டு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.



அதேவேளை, இன்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபடுகின்றோம்." - என்றார்.

(விரிவான செய்தி 17ஆம் பக்கத்தில்)




# கிராமியப் பெண்கள் தினத்தில் கௌரவிப்பு!

(பழுவூரான்)

சர்வதேச கிராமியப் பெண்கள் தினத்தை முன்னிட்டு கிராமிய மகளிரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (15) மட்டக்களப்பில் இடம்பெற்றது. கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் எம்.எல்.எம்.வுஹாரி தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

'அனைவருக்கும் நல்ல உணவைப் பயிரிடும் கிராமியப் பெண்கள்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாரம்பரிய கலை, கலாசார மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. ஆர்வத்துடன் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.



# தென்மராட்சி வலய ஆசிரியர் தின விழா!

(த.சுபேசன்)

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தின விழா வெள்ளிக்கிழமை (13) கொடிகாமம் ஏ9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம் பெற்றது .

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் க.மகேசன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி நிர்வாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி பிரதீபா காயத்திரி கஜபதி கலந்து கொண்டார்.



அத்துடன் அதிபர்கள், ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்கள் , ஓய்வு நிலை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆசிரியர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. ஓய்வு நிலை அதிபர் ,ஆசிரியர்களுக்கு மாலை அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

மேலும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற அதிபர், ஆசிரியர்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வழிப்படுத்துபவர் யார்?

சில முக்கியமான - உண்மையான - யதார்த்தமான - விடயங்களை வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த உரை அரங்கு ஒன்றில் முன் வைத்திருக்கின்றார் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன்.

தமிழ் அரசியல் கட்சிகளை வலுப்படுத்த - வழிப்படுத்த - மக்கள் இயக்கம் ஒன்று பலம் பெற வேண்டும் என்ற அவரது கருத்து காலத்தின் தேவையை - கட்டாயத்தை - உணர்த்தும் மிக முக்கிய அம்சம்.

பதவி ஆசையிலும், தங்களைப் பிரபலப்படுத்துவதிலும் மட்டுமே கருத்தாக இருக்கும் நமது அரசியல் தலைவர்கள், விடுதலைப் போராட்டத்தின் வழிமுறையில் துவண்டு கிடக்கும் நம் இனத்தைத் தங்களின் பேராசைப் போக்கால் - நப்பாசைச் செயற்பாட்டால் - அர்த்தமும் திடசங்கற்பமும் இல்லாத செயற்றிறனின்மையால் - மேலும் மோசமான நிலைக்குத் தள்ளிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதிலிருந்து மீள்வதற்கு ஐங்கரநேசன் குறிப்பிடுகின்றமை போல தமிழ் அரசியல் கட்சிகளை வழிநடத்தும் விதத்தில் ஒரு மக்கள் இயக்கம் பலம் பெற வேண்டும்.

இந்தியாவில் 1975இல் இந்திரா காந்தி அறிவித்த எமர்ஜென்சிக்கு எதிராக அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து வலுப்படுத்தி, வழிப்படுத்திய ஜெயப்பிரகாஷ் நாராயணன் போலவோ -

இந்தியாவில் கடந்த தசாப்தத்தில் ஆரம்பத்தில் ஊழலுக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடிய அண்ணா ஹஸாரே போன்றோ -

ஏனைய தமிழ் தேசிய அரசியல் கட்சிகளையும், இயக்கங்களையும் ஒற்றுமைப்படுத்தி வழிபடுத்துவதற்கும், நெறிப்படுத்துவதற்கும், தனிப்பட்ட அரசியல் பதவியாசைகளற்ற தலைவர்கள் நம் மத்தியில் தோன்றுவது இன்றைய காலத்தில் கட்டாயமாகும்.

அதனையே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசனின் கருத்தும் சுட்டிக் காட்டுகின்றது.

தமிழ் தேசியம் காலத்துக்கு காலம், அந்தந்தக் காலத்தை ஒட்டிய தேவையை நிறைவு செய்யக்கூடிய தகைமை கொண்ட தலைவர்களைத் தந்தே இருக்கின்றது. தந்தை செல்வா, தளபதி அமிர், தலைவர் பிரபா என்று காலத்தின் தேவையை நிறைவு செய்யும் தலைவர்களை இந்த தமிழர் தேசம் உற்பவித்தே வந்துள்ளது.

அத்தகைய ஒரு தேவையை இந்தக் காலகட்டம் தமிழர்களுக்கு இப்போதும் ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த இலங்கை தீவில் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களை - அவர்களின் தேசத்தை - தேசியத்தை - இந்த நெருக்கடி நிலையிலும் அதனை எதிர்கொண்டு மேம்படுவதற்கான சரியான பாதையில் - மார்க்கத்தில் - வழிபடுத்தி, வலுப்படுத்தி, நெறிப்படுத்தும் ஒரு வழிகாட்டியே இன்றைய தேவை.

நமது தற்குறித் தலைவர்களுக்கு மத்தியில், அப்படி ஒருவர் முகிழ்ந்தாலும் அவரைத் தமிழர் தேசம் உடன் அடையாளம் கண்டு, அவர் பின் திரள்வதும் கஷ்டமானதுதான். போலி முகங்களுக்கு மத்தியில் அந்த உண்மை முகம் தோற்றுவது எப்போது? அதனை நாம் அடையாளம் காண்பது எங்ஙனம்? காலம்தான் பதில் கூறும்.



## சம்மாந்துறை ஆஸ்பத்திரிக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பு

(அஸ்ஹர் ஆதம் )

சுகாதார அமைச்சின் நிர்வாக சேவையினரால் நடத்தப்பட்ட வைத்தியசாலைகளுக்கிடையிலான ஆய்வுகள் மற்றும் காட்சி விளக்கங்கள் தொடர்பான போட்டியில் திறமைகளை வெளிப்படுத்திய சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு அண்மையில் கொழும்பு கோல்ட்பேஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனீபா சான்றிதழ் பெற்றுக் கொண்டார்.





## சம்மாந்துறை பத்திரகாளி ஆலயத்தில் தீ மிதிப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ் குறிச்சி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலய தீ மிதிப்பு நேற்று (15) இடம்பெற்றது.

ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா 10 நாள்கள் இடம் பெற்று நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி அளவில் ஆலயத்துக்குச் சொந்தமான மாவடி வளவில் மஞ்சள் குளித்து பின்பு ஊர்வலமாக ஆலயத்துக்கு வந்து தீமிதிப்பு இடம்பெற்றது என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஆலய பிரதம குரு கு. லோகேஷ் கிரியைகளை நடத்தி வருகிறார்.

# யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு பஸ் மீது கல் வீச்சுச் தாக்குதல்!

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து மீது நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் கல் வீச்சு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த இ.போ.ச. பேருந்து மீது புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டனர். அத்துடன் மோட்டார் சைக்கிளை விட்டுத் தப்பி சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் இ.போ.ச. பேருந்தின் முன்பகுதியில் சிறிது சேதம் ஏற்பட்டது. பணிகளுக்கு எந்தப் பாதிப்புகளும் ஏற்படவில்லை.

சம்பவத்தை அடுத்து பேருந்தில் பயணித்த பயணிகளுக்கு மாற்று பேருந்து ஒழுங்கு செய்யப்பட்டு அனுப்பி




வைக்கப்பட்டனர். பின்னர் பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு எடுத்து செல்லப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





## கௌரவிப்பு நிகழ்வு...

(நூருல் ஹுதா உமர்)

கலாபூஷண அரச விருது விழாவின் போது இலங்கையின் கலைத் துறை வளரச்சிக்காக ஈடேற்றப்பட்ட சிறந்த சேவைக்காக புகழளிக்கும் வண்ணம் காரைதீவை சேர்ந்த சாமித்தம்பி திருவேணிசங்கமம் மற்றும் மாவடிப் பள்ளியை சேர்ந்த அ.லெ.அப்துல் சுபுஹான் அக்பர் ஆகியோர்களுக்கு கலாபூஷண அரச விருது வழங்கப்பட்டது.

இதனை கௌரவிக்கும் வகையில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் மற்றும் கலச்சார உத்தியோகத்தர்களால் அவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

## திருமலை கோணேஸ்வரா மாணவர்கள் ஒன்றுகூடல்

(ஹஸ்பர்)

திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கா. பொ. த. உயர்தர 2000 ஆம் ஆண்டு நண்பர்களால் 23 ஆண்டுகளுக்கு பின் ஒன்று கூடல் நேற்று (15) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதம அதிதிகளாக இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், 2000 உயர்தர நண்பார்கள் (இந்துக் கல்லூரி, புனித சூசியப்பர் கல்லூரி, விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்), பழைய மாணவர் சங்க செயலாளர், விளையாட்டு துறை ஆசிரியர் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது தலைமை உரையினை பிரகாஸ் ஆற்றினார். கௌரவ விருந்தினர் உரை இந்துக் கல்லூரி முன்னர் அதிபர் எஸ். பத்மசீலன் நிகழ்த்த அதனைத் தொடர்ந்து கவிஞர் பா. ஹம்சபாலனின் கவிதை இடம்பெற்றது.

தொடர்ந்து அமரத்துவம் அடைந்த ஆசிரியர்கள் மற்றும் நண்பர்களின் ஞாபகத்தமாக மரக்கன்றுகள் நடப்பட்டன.

கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றும் இடம்பெற்றது.





# தமிழ் அரசியல் கட்சிகளை வழிப்படுத்துவதற்கு மக்கள் இயக்கம் ஒன்று பலம் பெறவேண்டும்!

## எடுத்துரைக்கிறார் ஐங்கரநேசன்












விடுதலைப் புலிகள் இருந்த வரைக்கும் அவர்களின் அரசியல் துறையே தமிழ்த் தேசியக் கட்சிகளின் வழிகாட்டும் பீடமாக இருந்தது. அவர்கள் எதை முன்மொழிந்தார் களோ அதையே எமது கட்சித் தலை வர்கள் வழிமொழிந்தார்கள்.

தமிழ் மக்களுக்கான ஒரு தேசி யத் தலைமை இல்லாத நிலையில் தமிழ் அரசியல் கட்சிகள் ஒவ்வொன் றும் திக்கொன்றாக அவற்றினது எஜமானர்களின் அல்லது நிதியூட்டு நபர்களின் மனங்கோணாதவாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், கட்சிகளை வழிப் படுத்த மக்கள் இயக்கமொன்று பலம் பெறவேண்டும்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத் தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டிள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை(15) நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட் டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில் தெரிவித்துள்ளவை வரமாறு–

ஆறுகள் ஒரு போதும் பின்னோக் கிப் பாய்வதில்லை. அது போன்று தான் வரலாறும் பின்னோக்கிப் பாயாது. வரலாறு எங்களை எந்த இடத்தில் கொண்டு வந்து நிறுத்தி யிருக்கிறதோ, அந்த இடத்திலிருந்து தான் வரலாறு தந்த படிப்பினைக ளையும் உள்வாங்கிக் கொண்டு நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். ஆனால், இந்தக் கசப் பான உண்மையை ஏற்றுக் கொள்ள தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தயாராக இல்லை.

முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் முப்பது, நாற்பது வருடங்கள் பின்னால் சென்று அங்கிருந்து போராட நினைக் கிறார்கள். அதன் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் காலப் பொருத்தமற்று அடிக்கடி அறிவிக்கப்படும் கடையடைப்புப் போராட்டங்கள்.

தமிழ்க்கட்சி ஒன்றின் தலைவர் தாங்கள் ஆயுதங்களைக் கைவிட்ட தைப் பிழையென்று தற்போது உணர்வதாக அண்மையில் தெரி வித்திருக்கிறார். ஆயுதங்களைக் கீழே போட்டு ஓடி விட்டு, இப்போது கைவிட்டது என்று கூறுவது நகைப் புக்கிடமானது. ஆயுதம் பற்றிய வெட்டிப் பேச்சை மக்கள் இனி யொரு போதும் இரசிக்க மாட்டார்கள். அதற்கு நிகரான வீச்சுடன் மக்களை அணி திரட்டிக் காலி முகத்திடல், அரகலிய போன்று போராட முன் வாருங்கள்.

புகைப்படங்கள் எடுப்பதற்கு முண்டியடித்து முன்னால் நிற்கும் தலைவர்களாக இல்லாமல் சொல் லாலும் செயலாலும் முன்மாதிரியாக உள்ள தலைவர்களின் பின்னால் அணிவகுத்து வருவதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் தேசிய விடுத லைப் போராட்டத்தை, தேர்தலை மாத்திரமே இலக்காக கொண்டுள்ள கட்சிகளிடம் ஒப்படைத்து விட்டு ஒதுங்கியிருக்கிறோம். இந்தக் கையறு நிலையிலேயே வலுவான சிவில் சமூகம் அல்லது மக்கள் இயக்கம் ஒன்றின் அவசியம் உணரப்படுகிறது.

இருக்கும் மக்கள் அமைப்புகள் ஒன்றில் அரசியல் கட்சிகளின் பினாமிகளாகச் செயற்படுகின்றன. அல்லது சிவில் சமூகப் பிரதிநிதியா கப் பிரபலம் பெற்று விட்டால் அவரிடம் தேர்தல் ஆசை தொற்றிக் கொள்கிறது. இவற்றுக்கு இடங் கொடாது கட்சிகளின் மூக்கணாங் கயிறாகச் செயற்படக் கூடிய மக்கள் இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்ப எமது புத்திஜீவிகள் முன்வர வேண்டும்.– என்றார்.



# முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் அம்பாறை மாவட்டத்தில் புனரமைப்பு

(அஸ்ஹர் ஆதம், கே. எ. ஹமீட்)

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் பணிப்பின் பேரில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய நாவிதன்வெளி மத்திய முகாம் பிரதேசத்தில் 07ஆம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கட்சியின் கிளைகள், இளைஞர் கிளைகள்.மற்றும் மகளிர் கிளைகள் புனரமைப்பதற்காகக் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கும், கிராம சேவகர் பிரிவுகளில் கட்சி புனரமைப்பு நடவடிக்கைகாக நியமிக்கப்பட்ட குழுவினருக்குமான கலந்துரையாடல் (14) நாவிதன்வெளி மன்சூர் கிறீன் கார்டனில் இடம் பெற்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய முகாம் மத்திய குழுத் தலைவர் ஏ.சி.நஸார் ஹாஜியார் தலைமையில் இது இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ..எம்.மன்சூர், பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ காதிர், பிரதித் தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர பிரதிமுதல்வருமான ரஹ்மத் மன்சூர், அம்பாறை மாவட்டக் குழுவின் செயலாளர் ஏ.சி.சமால்தீன், நாவிதன் வெளி முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் என்.பி.நவாஸ், கட்சியின் முக்கிய பிரமுகர்கள், இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இதே வேளை ஒலுவில் மூன்றாம் பிரிவுக்கான கிளை புனரமைப்புப் பணிகளும் இடம் பெற்றுள்ளன.

இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒலுவில் அமைப்பாளர் எம்.சுபைர் ஆசிரியர், ஒலுவில் மத்திய குழுச் செயலாளர் ஜெமீல் ஹாஜியார் உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



## யானைகள் நேற்றும் அட்டகாசம்!

(எம்.ஏ.றமீஸ், சியாத் இஸ்மாயில்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சில மக்கள் குடியிருப்பு பிரதேசங்களில் நேற்று (15) காட்டு யானைகள் சில உட்புகுந்து சேதங்களை உண்டு பண்ணியுள்ளன என்ற பிரதேச மக்கள் கவலை தெரிவிகின்றனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியை அண்டிய மக்கள் குடியிருப்புக்குள் உட்புகுந்த இக்காட்டு யானைகள் வீடுகள் மற்றும் அக்கரைப்பற்று தேசிய பாடசாலை போன்றவற்றின் சுற்று மதில்களை உடைத்துள்ளன.

மேட்டு நிலப் பயிர்கள் மற்றும் மரம் செடி கொடிகள் பலவற்றையும் இக்காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன.

இரவு வேளைகளில் காட்டு யானைகள் பல இப்பிரதேசத்தில் நடமாடுவதால் பல்வேறான இன்னல்களுக்கு தாம் தினமும் முகம் கொடுத்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பல்வேறு தரப்பினருக்கும் தெரியப் படுத்தியும் இதுவரை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

கால் நடைகளுக்காகக் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெறுமதிமிக்க உணவுப் பைகளை இந்தக் காட்டு யானைகள் சுவர்களை உடைத்து உள்ளே சென்று நாசம் செய்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவில் கசிப்பு: கோடாவுடன் இருவர் கைது!

நாவற்காடு பிரதேசத்திலுள்ள கூளா முறிப்பு காட்டுப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று அழிக்கப்பட்டுள்ளது.

அங்கிரந்து சந்தேக நபர் இருவரை புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். அங்கிருந்து 760 லீற்றர் கசிப்பு, உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கோடா மற்றும் சில பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், விமானப்படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நாவற்காடு பிரதேசத்திலுள்ள கூளாமுறிப்பு காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் (14) சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையத்தைச் சுற்றிவளைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் எனவும் முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






## சமபோஷவின் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி

# வட மத்திய மாகாணச் சம்பியன் அநுராதபுரம் ம.ம.வித்தியாலயம்

சமபோஷ நடத்திய 2023 ஆம் ஆண்டுக்கான மாகாண மட்ட பாட சாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் வடமத்திய மாகாண சம்பியனாக அநுராதபுரம் மத்திய மாக வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சமபோஷ இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இந்நாட்டில் உள்ள எதிர்கால சந்ததியினரை போஷாக்கு மிக்கவர்களாகவும், குணம் மிக்கவர்களாகவும் உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

தேசத்தில் உள்ள சிறுவர்களுக்காக முன்னெடுத்துவரும் சமபோஷ 'சிகரம் தொடும் சிறார்கள்' திட்டத்தின் கீழ் சிறுவர்களின் கல்வித் திறமை, விளையாட்டுத்திறமை, போஷாக்கு, படைப்பாற்றல் மற்றும் நற்பண்புகளை வளர்ப்பதற்குத் தலைமைத்துவம் வழங்கி வருகிறது.

இதில் எதிர்கால சந்ததியினர் உடல் ரீதியான மற்றும் உளரீதியான ஆரோக்கியம், விளையாட்டுத் திறமையை வளர்த்துக் கொள்வதற்கு சமபோஷவின் வலுப்படுத்தலுடன் நடத்தப்படும் '2023 சமபோஷ பாடசாலை விளையாட்டுப் போட்டி' வடமத்தி, வடமேல், கிழக்கு, ஊவா மற்றும் தெற்கு ஆகிய ஐந்து மாகாணங்களுக்கு விஷ்தரிக்கப்பட்டுள்ளது.

இதில் 70 இற்கும் அதிகமான போட்டிகளில் 650 இற்கும் அதிகமான பாடசாலைகள் தமது விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தின.

சமபோஷ வடமத்திய மாகாண விளையாட்டுப் போட்டிகள் அநுராதபுரம் பொதுமக்கள் விளையாட்டரங்கில் செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை நடைபெற்றன.

இதில் வடமத்திய மாகாண சம்பியன்ஸ் பட்டத்தை அநுராதபுரம் மத்திய மகாவித்தியாலம் பெற்றுக்கொண்டது. இரண்டாவது இடத்தை தம்புத்தேகம மத்திய மகாவித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

வடமத்திய மாகாண விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சிறிமெவன் தர்மசேன, மாகாணக் கல்விப் பணிப்பாளர் எச்.எம்.டபிள்யூ.சமரக்கோன், வடமத்திய மாகாண நகர ஆணையாளரும், பதில் விளையாட்டு அபிவிருத்திப் பணிப்பாளருமான ருவன் விஜேசிங்க, உணவுப் பிரிவின் சிரேஷ்ட ஊக்குவிப்பு அதிகாரி சுமித் நிஸ்ஸங்க ஆகியோருடன் வெற்றியீட்டியவர்கள் படத்தில் காணப்படுகின்றனர்.




# மவுசாகல நீர் தேக்கத்தின் வான் கதவுகளைத் திறக்க முடிவு

## தாழ்நில மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பு

(மஸ்கெலியா நிருபர்)

மவுசாகல நீர் தேக்கத்தின் வான் கதவுகளைத் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தாழ்நில பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசர வேண்டுகோளை கென்யோன் நீர் மின் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மவுசாகல நீர் தேக்கத்தின் நீர் மட்டும் அதன் கொள்ளளவை எட்டியுள்ளது. இதனால் என் நேரத்திலும் வான் கதவுகள் வழியாக நீர் வெளியேற்றம் செய்யபடலாம். ஆகையால் தாழ் நிலப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

இந்த நிலையில் இந்தக் கங்கையில் நீராடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# மாங்குளம் ரயில் நிலையத்தில் குடிதண்ணீர், நூலக வசதிகள்





பயணிகளின் நலன் கருதி மாங்குளம் ரயில் நிலையத்தில் நூலகம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகர் பகுதியில் அமைந்துள்ள ரயில் நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் வசதிகள் மற்றும் நூலக வசதிகள் உள்ளிட்ட இதர வசதிகள் இல்லாத நிலைமை தொடர்ச்சியாக காணப்பட்டது.

இந்நிலையில் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் மாங்குளம் ரயில் நிலையத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகப் பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் ரயில் நிலையத்தை சூழவுள்ள பகுதிகள் துப்புரவு பணிகள் இடம்பெற்று அங்கு அழகுபடுத்தல் வேலைகளும் மர நடுகை திட்டங்களும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக நேற்று (15) பல்வேறு நலத்திட்டங்கள் மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பி.பி.கே. நிறுவனத்தின் அனுசரணையில் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் வசதியும் நூலகத்துக்கான அலுமாரி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

சிறகுகள் அமைப்பினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரால் இந்த நூலகத்துக்கான நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

கிரீன் லேயர் அமைப்பால் ரயில் நிலைய வளாகத்தில் 50 பயன் தரும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

ரயில் நிலைய அதிபர் க.கலைவேந்தனின் கோரிக்கையின் பேரில் ரயில் நிலைய அதிபர் க.சுதர்னின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். ரயில் நிலைய அத்தியட்சகர் சுரேந்திரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் கனகேஸ்வரன், மருத்துவர் க. உதயசீலன், பி.பி.கே. கணக்காய்வு நிறுவனத்தின் வவுனியா கிளை முகாமையாளர் சஜிந்தன், கிரீன் லேயர் அமைப்பின் பணிப்பாளர் சசிக்குமார், சிறகுகள் அமைப்பைச் சேர்ந்த சஜீவன், ரயில் நிலைய அதிபர் சி.அனுசியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# யானையால் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ. 1 லட்சம்

**(நவாஸ்)**

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் யானையால் பாதிக்கப்பட்டவருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலை பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சாரால் நேற்று (15) வழங்கப் பட்டது.

இதன்போது உதவிப் பிரதேச செயலாளர் றாசித் யஹியர், சமுக சேவை உத்தியோகத்தர், கணக்காளர்கள் எஸ்.எல்.சர்தார் மிர்சா, ஏ. எல். பைசாத் சமுக சேவைப் பிரிவின் பிரதான முகாமைத்துவ உதவியாளர் திருமதி வாசுகி மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் திருமதி சிபானா ஆகியோர் கலந்து கொண்டனர்.




# கல்முனையில் உலக முட்டை தினம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பான ஸஹிரியன் 90 அணியினர் உலக முட்டை தினத்தை கடந்த வெள்ளிக்கிழமை (13) மிகவும் சிறப்பான முறையில் அனுஷ்டித்தனர்.

இந்த அமைப்பினரால் கடந்த மார்ச் மாதம் ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தப்பட்டு வரும் கோழிப் பண்ணையில் இருந்து கொண்டு வரப்பட்ட முட்டைகள் அவித்து நண்பர்களிடையே பறிமாறப்பட்டது.

இந்த அமைப்பினரால் தினசரி கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வரும் கிரிக்கெட் பயிற்சியின் போதே இந்த உலக முட்டை தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பண வழங்க வேண்டும்

## பழனி திகாம்பரம் எம்.பி. கோரிக்கை

(பொகவந்தலாவ நிருபர்)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்குத் தீபாவளி முற்பணமாக 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவெரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று (15) ஞாயிற்றுக்கிழமை ஹட்டனில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்த கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த மக்கள் சந்திப்பில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனிதிகாம்பரம், பிரதி தலைவர் எம்.உதயகுமார், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.ஶ்ரீதரன், இளைஞர் அணி தலைவர் பா.சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் உரிய நிறுவனங்களிடம் கடிதம் ஒன்றைக் கையளிக்கப் போகிறோம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமேதாச வெற்றி பெற்றவுடன் அமைச்சுப் பதவியைப் பெற்றவுடன் பெருந்தொழிலாளர்களுக்கான காணி உரிமையைப் பெற்றுக் கொடுப்பேன்.

இன்று நாட்டில் இடம்பெறவுள்ள ஜனாதபதி தேர்தலில் ஒருபுறம் அனுரகுமார திஷாநாயக்க, மறுபுரம் சஜித்பிரேமேதாச, ஜக்கிய தேசிய கட்சி சார்பாக ரணில் விக்ரமசிங்க, தம்மிக்கபெரேரா, திலிப்விஜயசேகர, சரத்பொன்சோக்கா போன்றோர் போட்டியிட உள்ளனர்.

யார் போட்டியிட்டாலும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித்பிரேமதாஸ வெற்றி பெறுவார். மக்களின் ஆதரவு உள்ளவர்கள் மாத்திரமே வெற்றிபெற முடியும். மக்கள் ஆதரவு இல்லாதவர்கள் எவ்வாறு வெற்றி பெறுவார்கள்.

மாற்றுக் கட்சியினரைப் போல் மலையக மக்கள் மத்தியில் சென்று பொய்யான வாக்குறுதிகளைக் கூறி மக்களை நாம் ஏமாற்றப் போவதில்லை .


எனக்குத் தெரிந்த அளவில் நாட்டின் ஜனாதிபதி பொய் கூறுகிறார். ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்து 2025 ஆம் ஆண்டு வரை இந்த அரசை ஆட்சியில் இருக்கச் செய்ய முயற்சி செய்து வருகின்றனர். இது போன்ற முயற்சிகளில் இவர்கள் ஈடுபட்டால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டுபெருபான்மையை இவர்களுக்குப் பெற முடியாது.


மக்கள் இந்த அரசசை வீட்டுக்கு அனுப்ப எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பயந்து கொண்டு இந்த அரசு தேர்தலை நடத்தமல் இருக்கிறது. இவர்கள் அடுத்த வருடம் கட்டாயம் ஜனாதிபதி தேர்தலுக்குச் செல்ல வேண்டியதே.–எனக் குறிப்பிட்டார்.

# இஸ்ரேல் ஆக்கிரமித்த பாலஸ்தீனம்! ஈழத்தில் பறிபோகும் தமிழர் தாயகம் !!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

(பாலஸ்தீனர்கள் எப்படி தங்கள் மண்ணின் பூர்வீகத்தை இழந்தார்களோ, அதற்கு ஒப்ப ஈழத் தமிழர்களின் தாயக நிலம் எங்கும் ஆக்கிரமிப்பை இலங்கை அரசுகள் தீவிரப்படுத்துகின்றன.எவ்வாறு பாலஸ்தீனம் யூதர்களால் ஆக்கிரமிக்கப்பட்டதோ, ஈழத்திலும் சிங்களக் குடியேற்றங்கள் நிகழ்ந்தமைக் கான வரலாற்று சான்றுகள் உள்ளன)




ஈழத்தின் வரலாற்றுக் காலம் தொட்டே தமிழர்கள் தங்களுக்கெனத் தனியான தாயகத்தைக் கொண்டிருந்தமை என்பது வரலாற்று சான்றாகும். தற்போது தமிழர்களின் வரலாற்றை அழிக்கவும், சிதைக்கவும், மாற்றி எழுதவும் சிங்கள - பௌத்த அரசுகள் முயன்று அதில் கணிசமான வெற்றியும் கண்டுள்ளன.

இதனைப் போலவே 1946 வரை முழுமையாக பாலஸ்தீனம் என்று உலக வரைபடங்களில் குறிக்கப்பட்ட தேசம், இன்று குறுகிச் சிறிதாகி மத்திய கிழக்கின் அவலமிக்க மண்ணாக மாறியுள்ளது.1947 ஆம் ஆண்டு ஐ.நா. சபை மற்றும் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளின் திட்டமிட்ட சதியின் மூலம் பாலஸ்தீனம் துண்டாடப்பட்டு வந்தேறிகளான யூதர்களிடம் தாரை வார்த்து கொடுக்கப்பட்டது.

### பாலஸ்தீனமும் ஈழமும்

இஸ்ரேல் - பாலஸ்தீன முரண்பாடு நூறாண்டுகளாக துயரமும் ஆக்கிரமிப்பும் இன்னமும் தொடர்கிறது. ஐ.நா. சபையின் 75 ஆண்டுகால வரலாற்றில் பாலஸ்தீனத்துக்கு உரிய நியாயத்தை உறுதி செய்வதில், ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்துள்ளது. ஐ.நா. சபையில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகக் கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கூட அமெரிக்கவும், மேற்குலக நாடுகளும் ஆதரித்ததில்லை.

தற்போது இராணுவ முற்றுகைக்குள் காசா முடங்கி, இஸ்ரேலின் போர் குற்றம் தொடர்கிறது. உலகின் மனச்சாட்சியும் மௌனித்திருக்க, ஐ.நா. சபையின் தோல்வியை வெளிப்படுத்தும் வண்ணம் இஸ்ரேலின் கோரத் தாண்டவம் அரங்கேறுகிறது.

பாலஸ்தீனர்கள் எப்படி தங்கள் மண்ணில் பூர்வீகமாக இருந்தார்களோ, அதற்கு ஒப்ப பண்டைய காலத்தில் தமிழர்கள் இலங்கை எங்கும் ஆண்டிருப்பதும், அரசுரிமை செல்வாக்குச் செலுத்தியிருக்கக் கூடும் என்பதும் பல ஆராய்ச்சியாளர் கருத்து.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பத்தாம் நூற்றாண்டுவரை இலங்கையின் தலை நகரமாக இருந்த அநுராதபுரத்தில் மிக முற்பட்ட காலங்களிலேயே தமிழ் வணிகர்களும், சிற்பிகளும் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. வரலாற்று ரீதியாக கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களிலிருந்தே அனுராதபுரத்தைத் தமிழர்கள் ஆண்டிருப்பதும் மகாவம்சம் தரும் குறிப்புகளில் இருந்து அறியத் தருகின்றது.

இவ்வாறு இலங்கை எங்கும் இருந்த தமிழ் இராசதானிகள் பின்னர் ஐரோப்பியர்களால் கைப்பற்றப்பட்டு, தமிழர்களின் வரலாறு அழிக்கப்பட்டது. இதன் பின்னர் இலங்கைத் தீவு பிரித்தானியாவின் காலனித்துவத்தில் இருந்து விடுதலை அடைந்த காலம் முதல், ஈழத் தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திச் சாத்வீக முறைப் போராட்டங்களை மேற்கொண்டு வந்தனர். இப்போராட்டங்கள் வன்முறையின் ஊடாக அடக்கப்பட்டதால், ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனம் பாலஸ்தீனம் என்று உலக வரைபடங்களில் குறிக்கப்பட்ட தேசம், 1947 ஆம் ஆண்டு ஐ.நா. சபை மாற்றும் இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளின் திட்டமிட்ட சதியின் மூலம் பாலஸ்தீனம் துண்டாடப்பட்டு யூதர்களிடம் கொடுக்கப்பட்டது.

1967 ஆம் ஆண்டு திட்டமிட்ட பெரும் தாக்குதல் மூலம் பாலஸ்தீனத்தின் பெரும்பான்மை இடங்களை யூதர்கள் ஆக்கிரமித்தனர்.

2000 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட கால கட்டத்தில் கிட்டத்தட்ட பெரும்பான்மையான (காசா மேற்குக்கரை) உள்ளிட்ட சில பகுதிகளை தவிர 90 வீதமான அதிகமான பகுதிகளை யூதர்கள் ஆக்கிரமித்துள்ளனர்.

இந்த பாலஸ்தீனப் பிரச்சினையை நம் காலத்தின் மாபெரும் தார்மீகப் பிரச்சினை என்றார் நெல்சன் மண்டேலா. பாலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை, அவர்களின் துயரத்தை இதைவிடச் சுருக்கமாக அதே நேரத்தில் மனத்தைத் தைக்கும் விதமாக ஒருவர் கூற முடியாது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் இரண்டு சம்பவங்கள் உலகை உலுக்கிக் கொண்டிருந்தன. இதில் ஒன்றான தென்னாப்பிரிக்க நிறவெறி ஆட்சி நீண்ட நெடிய போராட்டத்துக்குப் பின்னர் 1994 இல் முடிவுக்கு வந்தது. ஆனால் 1940களில் தொடங்கிய பாலஸ்தீன மக்களின் துயரம் இன்றளவும் தொடர்கிறது. பலஸ்தீன சுதந்திர போராட்டமும் இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் உள்ளது என நெல்சன் மண்டேலாவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



### பிரிட்டனின் துரோகங்கள்

வரலாற்று ரீதியில் பாலஸ்தீனத்தை பார்த்தால், முதல் உலகப் போரில் நேச நாடுகள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பாலஸ்தீனப் பகுதியின் நிர்வாகத்தை பிரிட்டனிடம் நேச நாடுகள் அளித்தன. போருக்குப் பின் உலகம் முழுவதிலிருந்தும் யூதர்களைப் பிரிட்டன் பாலஸ்தீனப் பகுதிகளில் குடியமர்த்தியது. யூதர்கள் தங்களுக்கென்று பலமிக்க இராணுவம் அமைத்துப் பாலஸ்தீனர்களை தாக்கினர். பிரிட்டன் அதைக் கண்டு கொள்ள வில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேல் ஆக்கிரமித்த...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

1948 மே 14 அன்று பிரிட்டன் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறியவுடன், பலமிக்க ராணுவத்தை கொண்டிருந்த யூதர்கள், அமெரிக்க உதவியுடன், பாலஸ்தீனத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றினர். சுமார் 15000 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். மிகப் பெரிய அளவில் இன ஒழிப்பு நடவடிக்கைகள் பாலஸ்தீனர்களுக்கு எதிராக நடத்தப்பட்டது.

ஏழு லட்சம் பாலஸ்தீனர்கள் தங்கள் மூதாதையர் வீடுகளில் இருந்து விரட்டப்பட்டனர். ஆயிரக் கணக்கான பாலஸ்தீன கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இவையனைத்தும் அமெரிக்க ஆதரவுடன் நடைபெற்றன. அதே தினத்தில் யூதர்கள் "இஸ்ரேல்" என்ற நாட்டை அறிவித்தனர். அனைத்து ஆவணங்களிலும் இருந்த 'பாலஸ்தீனம்' என்ற பெயரை அழித்தனர். இந்த தினத்தை பாலஸ்தீனர்கள் 'அல்-நக்பா' என்றழைக்கின்றனர். நக்பா என்றால் பேரழிவு என்று அர்த்தம்.

**முதல் சிங்கள குடியேற்றம் கந்தளாயில்**

எவ்வாறு பாலஸ்தீனம் யூதர்களால் ஆக்கிரமிக்கப்பட்டதோ, ஈழத்திலும் சிங்களக் குடியேற்றங்கள் நிகழ்ந்தன. இலங்கையிலும் முதன் முதலில் சிங்களக் குடியேற்றம் இடம்பெற்ற பிரதேசம் திருகோணமலையின் கந்தளாய். 1940களில் இங்கு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தனியே தமிழ் பேசும் மாவட்டமாகத் தமிழரின் தலை நகராக விளங்கிய திருகோணமலையில் தற்போது ஒரு தொகுதியைக் கூட வெற்றி கொள்ள முடியாத நிலை உருவாகி உள்ளது. தமிழர் தலைநகரில் இன்று பெரும்பான்மையினர் சிங்களவர்களே.

அப்போது கந்தளாய் திட்டத்தைத் தொடக்கி வைத்த பிரதமர் டி.எஸ். சேனநாயக்க, ஆலமரம் ஒன்றை நட்டு வைத்த பின்னர், அங்கு குழுமியிருந்த குடியேற்றவாசிகளான சிங்கள மக்களிடம், "இந்த மரம் வளர்ந்து பெரிதாகக் கிளை பரப்பி நிற்கும்போது இங்கு நீங்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்று கூறிச் சிங்கள – பௌத்த மேலாண்மையையும், ஆக்கிரமிப்பு மனோபாவத்தையும், இனக் குரோதத்தையும் ஒரு சேரப் பற்றவைத்தார். அன்று அவர் பற்ற வைத்த சிறு பொறியே இன்று இனவாதப் பெருந் தீயாக வளர்ந்துள்ளது.

ஈழத்தின் வடக்கு –கிழக்கில் நில அபகரிப்பு, சிங்கள குடியேற்றங்கள் மற்றும் இராணுவமயமாக்கல் எந்தளவு தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதற்கு அதிர்ச்சி அளிக்கும் விவரங்கள் மற்றும் ஆதாரங்கள் பல வெளிவந்துள்ளன.

இலங்கை தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், நிலவள திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாகப் பௌத்த மயமாக்கல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை இலங்கை அரசு முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகிறது.

**கல்லோயாவில் சிங்களக் குடியேற்றம்**

இதன் பின்னர் மட்டக்களப்பு மாவட்டமாகப் பரந்து விரிந்திருந்த தமிழ்ப் பிரதேசமான அம்பாறையில் கல்லோயாத் திட்டத்தைத் தொடக்கி வைத்தவர் டட்லி சேனநாயக்க. இவரது தந்தையான டி.எஸ். சேனநாயக்க பற்ற வைத்த இனவாதத் தீயை மீண்டும் வளர்த்தெடுத்தவர் இவரே. இவரின் தந்தை திருகோணமலையில் தொடக்கி வைத்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டத்தை மட்டக்களப்பில் இன்றைய அம்பாறையில் நடைமுறைப்படுத்தினார்.

டட்லி சேனநாயக்காவின் பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை எதிர்த்து அரசியல் செய்யத் துணிந்த ஆர். டபிள்யூ. பண்டாரநாயக்கா நாடு முழுவதும் இனவாதத் தீயைப் பற்ற வைத்து ஆட்சியைப் பிடித்தார். இவரின் காலத்தில் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. இந்தக் குடியேற்றத் திட்டத்தாலேயே திட்டமிட்ட முறையில் 1956 ஜுன் கலவரம் முன்னெடுக்கப்பட்டது.

ஈழத்தமிழர்களின் சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றவும், தமிழ் மக்கள் தமது நிலங்களுக்கு செல்வதை தடுக்கவும் அபிவிருத்தி திட்டங்கள் என்ற போர்வையில் தமிழர் பிரதேசங்களில் அரசுகளால் முன்னெடுக்கப்படும் சிங்களக் குடியேற்றம் தற்போது தீவிரமாக வளர்ந்து வருகிறது.

அத்துடன் வடக்கு – கிழக்கில் உள்ள சுமார் 200 இற்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்த தமிழ் ஆலயங்களைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகிறன.

அத்துடன் தமிழர் தாயகம் எங்கிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் அமைப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இதனாலேயே வடக்கு – கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமது உரிமைக்காகக் கடந்த 70 வருடங்களுக்கு மேலாக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடினர். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பயங்கரவாதமாகத்




தெற்கில் சிங்கள மக்களிடத்திலும், சர்வதேசத்தின் மத்தியிலும் சித்தரித்த இலங்கை அரசு லட்சக் கணக்கான தமிழ் மக்களைப் படுகொலை செய்து, கொடுங்கோல் அடக்குமுறை இராணுவத்தால் தமிழர் தாயகம் எங்கும் ஆக்கிரமித்துள்ளது.

**இதய பூமியான வெலிஓயாவில் சிங்களக் குடியேற்றம்**

இதுபோலவே, தமிழரின் இதய பூமி என்று வர்ணிக்கப்பட்ட மணலாறு பிரதேசம் வெலிஓயா சிங்களக் குடியேற்றத் திட்டமாக மாறியது அனைவரும் அறிந்ததே. அகன்று விரியத் துடிக்கும் இந்தப் பிரதேசம் முல்லைத்தீவின் கரைத்துறைப்பற்று, செம்மலை பகுதிகளையும் சிங்கள அரசு தனது ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வந்துள்ளது.

ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த தமிழர் தாயகம் இன்று வடக்கு – கிழக்கு மாகாணங்களுடன் மட்டும் சுருங்கி, மட்டுப்பட்டு தமிழ்த் தேசியத்தைச் சிதைவடையச் செய்து, அவர்களது இருப்பை இல்லாமல் செய்வதற்காகப் பல வகையிலும் கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஆளும் அரசுகள் முன்னெடுத்து வருகின்றன.

தமிழ் மக்களின் தேசிய ஆயுதப் போராட்டம் இலங்கை பேரினவாத அரசால் கொடுங்கரம் கொண்டு மிகப் பெரும் மனிதப் பேரழிப்பின் ஊடாக முள்ளிவாய்க்காலில் 2009இல் மௌனிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடரில், இலங்கையில் முடிவுற்ற போர் ,

(15ஆம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேல் ஆக்கிரமித்த...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தமிழ் மக்களின் அழிக் கப்பட்ட நிலம், வாழ்வு மற்றும் அடை யாளம் என்ற ஆய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதில் வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் எந்தளவுக்கு துன்பப்படுத்தப்படுகின்றார்கள் என்பதற் கான அதிர்ச்சியளிக்கும் ஆதாரங்களை வெளிப்படுத்தி உள்ளனர்.

இந்த இறுதியுத்தத்தின் போது இறுதி ஆறு மாதங்களில் மட்டும் ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் உறவுகள் கொல்லப்பட்டதையும், கைக்குழந்தை கள், சிறுவர்கள் உட்பட ஆயிரக் கணக் கானவர்கள் வலிந்து காணாமல் ஆக் கப்பட்டதும் இந்த உலகறியும்.

இறுதி யுத்தம் நிறைவடைந்து பதினான்கு ஆண்டுகளில் வடக்கு - கிழக்கை இராணுவ மயமாக்கிவரும் இலங்கை அரசு தமிழ் மக்களின் கலாசார, பண்பாட்டு அடையாளங்களை அழிப்பதுடன் வடக்கு - கிழக்கு பூர்வீக குடிகளான தமிழர்களின் இனப்பரம்ப லில் மாற்றத்தை உருவாக்கி வருகிறது.

### நூற்றாண்டுகளாக தொடரும் துயரம்

ஈழத் தமிழர் அல்லல் படுவதைப் போலவே, இஸ்ரேல் - பாலஸ்தீன முரண்பாடு. நூறாண்டுகளாகத் தொட ரும் துயரமும் ஆக்கிரமிப்பும் இன்ன மும் தொடர்கிறது. ஐ.நா.சபையின் 75 ஆண்டு கால வரலாற்றில் பாலஸ்தீனத் துக்கு உரிய நியாயத்தை உறுதி செய் வதில், ஐக்கிய நாடுகள் சபை அப் பட்டமாக தோல்வியடைந்துள்ளது.

ஐ.நா. சபையில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகக் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கூட அமெரிக்கவும், மேற்குலக நாடுகளும் ஆதரித்ததில்லை.

தற்போதை இராணுவ முற்றுகைக் குள் காசா முடங்கி, இஸ்ரேலின் போர் குற்றம் தொடர்கிறது. உலகின் மனச் சாட்சியும் மௌனித்திருக்க, ஐ.நா.சபை யின் தோல்வியை வெளிப்படுத்தும் வண்ணம் இஸ்ரேலின் கோரத் தாண டவம் அரங்கேறுகிறது.

ஏற்கனவே, காசா முனைக்கு பல வேறு வசதிகளை தடுத்து நிறுத்தி உலகின் மிகப்பெரிய (Open Air Prison) எனப்படும் திறந்தவெளி சிறையாகவே காசாவை இஸ்ரேல் வைத்துள்ளது. காசாவில் உள்ள பத்து பாலஸ்தீனியர்க ளில் ஏழு பேர் அகதிகளாக பதிவு செய் யப்பட்டுள்ளனர். சொந்த நாட்டுக்குள் ளேயே அகதிகளாக வாழும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆனால், இந்த முழு முற்றுகை ஒன்றும் காசாவுக்குப் புதிதல்ல. ஏற்க னவே அங்கு 22 மணி நேரம் மின்சாரம் இருக்காது. இஸ்ரேல் அறிவிப்பால் தற்போது 24 மணி நேரமும் மின்சாரம் இருக்காது. காசாவில் வறுமை மற்றும் உணவுப் பற்றாக்குறையால் ஏழு சதவீத குழந்தைகள் நீண்ட கால ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக வளர்ச்சி குன் றிய நிலையில் உள்ளனர். 60 சதவீத குழந்தைகள் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. தரவுகள் கூறுகின்றன.

தற்போது உணவு, எரிபொருள் மற்றும் மருந்து பொருள்கள் எதுவும் உள்ளே செல்ல இயலாதவாறு இஸ்ரேல் முழுமையாகக் காசாவை முற்றுகை செய்துள்ளது. ஏற்கெனவே இருந்த எகிப்து ஊடான ஒரே வழியும் அடைப் பட்டுவிட்டது. காசாவின் மருத்துவமனை களில் போதிய மருந்து பொருள்கள் இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த சூழலில், போர் குற்றத்தின் கீழ்வரும், மனித நேயத்துக்கு எதிரான, மின்சாரம் வழங்கப்படாது, உணவு வழங்கப்படாது, தண்ணீர் வழங்கப்ப டாது, எரிவாயு வழங்கப்படாது அனைத் தும் மூடப்படும் என்று இஸ்ரேல் அறிவித் துள்ளது. இதற்குப் பல நாடுகள் கண்ட னங்களை முன்வைத்துள்ளனர். ஆயி னும் இஸ்ரேல் தொடரும் போர் குற் றத்தை மேற்கு உலகின் மௌனமானது ஐ.நா. சபையின் தோல்வியாகவே கருதலாம்.

### பாலஸ்தீனம் பற்றி காந்தி

பாலஸ்தீனர்களது உரிமையைப் பற்றி மகாத்மா காந்தி பேசுகிற போது, "ஆங்கிலேயர்களுக்கு எப்படி இங்கி லாந்து சொந்தமோ பிரெஞ்சுக்காரர்க ளுக்கு எப்படி பிரான்ஸ் சொந்தமோ அதைப் போலவே பாலஸ்தீனம் அவர்க ளுக்குச் சொந்தமானது. பாலஸ்தீனம் மீது யூதர்களைத் திணிப்பது தவறான தும் மனிதத்தன்மையற்றதும் ஆகும்.

பாலஸ்தீனத்தை ஒழித்து ஒரு பகுதி யையோ அல்லது முழுவதையுமோ யூதர்களின் தேசமாக்குவது என்பது மனித குலத்துக்கே எதிரான குற்றம்" என்றார் காந்தி.

நேர்மையும் நீதியுணர்வும் கொண்ட யாருமே இஸ்ரேல் அரசை ஒரு போதும் ஆதரித்ததில்லை என்ற காந்தியின் கருத்து மேற்குலகின் மனச்சாட்சியை எப்போதும் உலுக்குகிறது.

# பலஸ்தீன் - காஸா மக்களின் அமைதிக்குப் பிரார்த்திப்போம்!

## ரிஷாத் பதியுதீன் எம்.பி. தெரிவிப்பு

(ரஸீன் ரஸ்மின்)

பலஸ்தீன் - காஸா மக்களின் அனைத்து உரிமைகளும் அந்த மக்க ளுக்கு வழங்கப்பட்டு, அங்கு நிரந்தர சமாதானம் உருவாக வேண்டி அதிகமாக பிரார்த்தனை செய்வோம் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷ ாத் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம் லயன்ஸ் கழகத்தால் ஏற் பாடு செய்யப்பட்ட உலமாக்கள் - ஹாபிழ் களுக்கிடையில் அகில இலங்கை ரீதியி லான இரவு , பகல் கிரிக்கெட் சுற்றுப் போட்டி முந்தல், அக்கரவெளி எவர் கிரீன் விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை (14) இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மத்திய குழு உறுப்பினர் என்.டி.எம்.தாஹிர், கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர்களான எம்.ஐ.எம். ஆஷிக், பைசர் மரிக்கார், எச்.முஹம்மட் சிபான் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

ரிஷாத் பதியுதீன் எம்.பி. தொடர்ந்து உரையாற்றுகையில்–

மேற்கத்தேய நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஆயுத பலத்தையும், பண பலத் தையும் ஒன்று சேர்த்து பலஸ்தீன் மக்க ளைத் தாக்கி, அநியாயம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

சிறுவர்கள், வயோதிபர்கள் , கரப்பி ணித் தாய்மார்கள் என்று கூடப் பார்க்கா மல் எந்த உள்ளங்களும் ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு அந்த மக்களை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

உண்பதற்கு உணவு இல்லாமல், குடிப்பதற்கு குடிநீர் இல்லாமலும் , தமக் குத் தேவையான மருத்துவ வசதி மற்றும் மின்சார வசதி இல்லாமலும் அந்த மக் கள் கஷ்டப்படுகிறார்கள். இந்தப் போரின் உச்சத்தால் தமது குடும்பங்களை, உற வுகளை இழந்து வேதனைப் படுகிறார்கள்.

காஸா மீதான இஸ்ரேல் முன்னெடுக் கும் இந்த மிலேச்சத்தனமான தாக்குத லைக் கண்டித்தும், பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவும் வெள்ளிக்கிழமை இலங்



கையில் மாத்திரமன்றி, உலக நாடுக ளிலும் உள்ள முஸ்லிம்களால் ஆர்ப்பாட் டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ் ரேல் முன்னெடுக்கும் காட்டுமிராண்டித்த னமான வன்முறைகளை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசின் ஊடாக எங்களால் முடிந்த அளவில் அழுத்தங் களை வழங்கி வருகிறோம்.

பல தசாப்தங்களாக யூதர்களால் கையகப்படுத்தி வைத்திருக்கும் முஸ் லிம்களின் மூன்றாவது புனிதஸ்தலமான மஸ்ஜிதுல் அக்ஸா மற்றும் அந்த மக்களின் நிலம், சொத்துக்கள் உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் அந்த மக்களுக்கு வழங்கப்பட்டு நிம்மதியான, நிரந்தர சமாதானம் அங்கு உருவாக வேண்டும் என்று நான் பிரார்த்திக்கி றேன்.- என்றார்.

# காசாவை இஸ்ரேல் படைகள் ஆக்கிரமிப்பது மிகப்பெரும் தவறாகிவிடும் என்கிறார் பைடன்

இஸ்ரேல் - பாலஸ்தீனம் போர் வெடித்துள்ள நிலையில் பாலஸ்தீனத்தின் காசாவில் வான், கடல், தரைவழி என மும்முனை தாக்குதலை நடத்தப் போவதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

ஆயினும் வானிலை காரணமாக தரைவழி தாக்குதலை தற்காலிகமாக ஒத்திவைப்பதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது. காசாவை முழுமையாக ஆக்கிரமிக்கும் திட்டத்தில் இஸ்ரேல் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

பாலஸ்தீனத்தின் ஹமாஸ்'க்கு எதிரான இந்தப் போரில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா நேரடி ஆதரவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, தனியார் செய்தி நிறுவனத்திற்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இன்று பேட்டியளித்தார். அப்போது, இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அந்த கேள்விக்கு பதில் அளித்த அமெரிக்காவின் அதிபர் ஜோ பைடன்,



இஸ்ரேல் - பாலஸ்தீன போரில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா உறுதுணையாக நிற்கும் என்றார்.

"ஹமாஸ் அமைப்பு ஒட்டுமொத்தமாக ஒழிக்கப்பட வேண்டும். ஆனால், காசா முனையை இஸ்ரேல் ஆக்கிரமிப்பது மிகப்பெரிய தவறாகிவிடும். காசாவில் பாலஸ்தீன அரசு மற்றும் பாலஸ்தீன நாடு அமைவதற்கான வழி தேவை உள்ளது. அதேவேளை, பாலஸ்தீன நாடு அமைவதற்கான வழியை தற்போது இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளாது.

"ஆனால், ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்புகளின் கொள்கைகளை பெரும்பாலான பாலஸ்தீனர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இஸ்ரேல் விரைவில் புரிந்து கொள்ளும்.

"லெபனானில் இருந்து இஸ்ரேலின் வடக்கு எல்லையில் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துகிறார்கள். இந்த தாக்குதலுக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது. அவர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால் தாக்குதல் நடத்த வேண்டாம். போரை நீட்டிக்க வேண்டாம்" - என்றார்.

இஸ்ரேலுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வந்த பைடன், தற்போது சுதந்திர பாலஸ்தீனத்திற்காகவும் குரல் கொடுத்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே இஸ்ரேலுக்கு எந்த நேரத்திலும் உதவும் வகையில் அமெரிக்கா ஏற்கனவே தனது மிகப்பெரிய போர்க்கப்பலை மத்திய தரைக்கடல் பகுதியில் நிறுத்திவைத்திருக்கும் நிலையில், மேலும் ஒரு போர்க்கப்பலை அங்கு அனுப்ப இருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# காசா முனையின் தென் எல்லையை எகிப்து திறக்க இஸ்ரேல் அனுமதி!

காசாவில் உள்ள ஹமாஸ் ஆயுதக் குழுவினர் - இஸ்ரேல் இடையே இன்று 10 ஆவது நாளாகப் போர் நீடித்து வருகிறது. காசா முனையின் தெற்கு எல்லையில் எகிப்து அமைந்துள்ளது. காசாவில் இருந்து எகிப்து செல்ல ரபா நகரில் உள்ள எல்லைப்பகுதியே ஒரே வழியாகும். இஸ்ரேல் தாக்குதல் தொடங்கியதில் இருந்தே காசாவுடனான எல் லையை எகிப்து மூடியுள்ளது.

இதனால், ஆயிரக்கணக்கானோர் காசாவில் இருந்து வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர். அதேவேளை, போர் தொடங்கிய ஓரிரு நாளில் ரபா எல்லை அருகே இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. இதனால், உணவு உள்பட மனிதாபிமான நிவாரண உதவிகள் காசாவுக்கு கொண்டு செல்வதில் சிக்கல் நிலவி வந்தது.



காசா முனையில் சிக்கியுள்ள வெளிநாட்டினரும் அப்பகுதியை விட்டு வெளியேற முடியாமல் தவித்து வந்தனர்.

இந்நிலையில், காசாவின் ரபா நகர் எல்லையை இன்று திறக்க எகிப்துக்கு இஸ்ரேல் தற்காலிக அனுமதி வழங்கியுள்ளது. இந்த எல்லை வழியாக வெளிநாட்டு பாஸ்போர்ட் வைத்துள்ளவர்கள் வெளியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், உணவு உள்பட மனிதாபிமான நிவாரண உதவி பொருள்களை எகிப்து எல்லை வழியாக காசாவுக்குள் கொண்டு செல்ல இஸ்ரேல் அனுமதி வழங்கியுள்ளதாகவும் கூறப்பட்டது.

மிக குறுகிய நேரம் மட்டுமே இந்த எல்லை திறக்கப்படும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. எகிப்துடனான எல்லை திறக்கப்படும்போது தெற்கு காசா பகுதியில் எந்த வித தாக்குதலும் நடத்தப்பட மாட்டாது என்றும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ரபா நகர எல்லையை இன்று காலை 10 மணி முதல் (அப்போது இஸ்ரேல் நேரம் 9.45) திறக்க இஸ்ரேல் அனுமதி வழங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# முன்னாள் உலக அழகி போட்டியாளர் 26 வயதில் புற்றுநோயினால் மரணம்

உருகுவே நாட்டை சேர்ந்த முன்னாள் உலக அழகி போட்டியாளர் 26 வயதில் மரணம் அடைந்துள் ளார்.

உருகுவே நாட்டை சேர்ந்த ஷெரிகா டி அர்மாஸ் (வயது 26) 2015ஆம் ஆண்டில் உலக அழகி போட்டியாளராக கலந்து கொண்டார். இவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டு வந்துள்ளார். இதற்காக கீமோதெரபி மற்றும் ரேடியோதெரபி உள்ளிட்ட சிகிச்சைகளை பெற்று வந்து இருக்கிறார்.

இந்நிலையில் அவர் மரணம் அடைந்துள்ளார். அவருடைய மர ணம் உருகுவே மற்றும் உலக நாடு கள் முழுவதும் அதிர்ச்சி அலை களை ஏற்படுத்தி உள்ளது.

அவருடைய மறைவுக்கு உருகுவேவின் மிஸ் யூனிவர்ஸ் அழகியான கர்லா ரொமிரோ, என்னுடைய வாழ்வில் நான் சந்தித்தவர்களில் மிக அழகிய பெண்களில் ஒருவர் என தெரிவித்து உள்ளார். இதேபோன்று 2021 ஆம் ஆண்டுக்கான மிஸ் உருகுவே அழகியான லோலா டி லாஸ் சான்டோஸ், எனக்கு அளித்த அனைத்து ஆதரவுக்காகவும், அன்பு, மகிழ்ச்சி என இன்றளவும் அவை என்னுடன் மீதமுள்ளன. அதற்காக எப்போதும் உங்களை நான் நினைவுகூர்வேன் என பதிவிட்டு உள்ளார்.



# இராமேஸ்வரம் மீனவர்கள் இன்று முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் குதிப்பு

## இலங்கைப் படையினால் கைதான சகாக்களையும் விசைப்படகுகளையும் உடன் விடுவிக்க வலியுறுத்தி

இலங்கைக் கடற்படையால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் ஐந்து விசைப்படகுகளையும், 27 மீனவர்களையும் விடுவிக்க வலியுறுத்தி நாளை மறுதினம் 18 ஆம் திகதி பாம்பன் சாலைப் பாலத்தை முற்றுகை யிட்டு சாலை மறியல் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ள இராமேஸ்வரம் மீன வர்கள் இன்று முதல் வேலை நிறுத்த போராட்டத்தையும் அறிவித்துள்ள னர்.

இராமேஸ்வரம், மண்டபம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் மீன் பிடிப்பதற்கான அனுமதி சீட்டை பெற்று சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர்.

இந்த நிலையில் நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதிக்கு ரோந்து வந்த இலங்கைக் கடற்படை மூன்று விசைப்படகையும் அதிலிருந்து 12 மீனவர்களை கைது செய்தது. அதை போல தனுஷ்கோடி – தலைமன்னார் இடையே மீன்பிடித்து கொண்டிருந்த போது இரண்டு விசைப்பட கையும் அதிலிருந்து 15 மீனவர்களையும் கைது செய்து கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளது.

இந்த நிலையில் ஐந்து விசைப்பட குகளையும், 27 மீனவர்களையும் விடுவிக்கச் செய்ய வேண்டும், அதே போன்று இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட இராமேஸ்வரம், ஜெகதாப்பட்டினத்தை சேர்ந்த மீனவர் களின் 9 படகுகளை மத்திய அரசு மீட்டு கொடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்ற 18ஆம் திகதி பாம்பன் சாலைப் பாலத் தின் நடுவில் மீனவர்கள் முற்றுகையிட்டு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.

மேலும் இன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்திலும் ஈடுபடபோகிறார்கள் எனவும் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

# மீனவர் போராட்டம் தேவையேயற்றதாம்!

## மத்திய இணை அமைச்சர் முருகன் கருத்து



இராமேசுவரம் மீனவர்களின் வேலை நிறுத்தப்போராட்டம் தேவையற்றது என்று இந்திய மத்திய இணை அமைச் சர் எல்.முருகன் கூறினார்.

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகு களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இன்று (திங்கட்கிழமை) முதல் இராமேசுவரத்தில் விசைப்படகு மீனவர்கள் மீன் பிடிக் கச் செல்லாமல் கால வரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் மீனவர்களின் போராட்டம் குறித்து மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் கூறியதாவது:- “இராமேசுவரம் மீனவர்க ளின் வேலை நிறுத்தப்போராட்டம் தேவையற்றது. மீனவர்கள் பிரச்சினை கள் குறித்து பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வு காண வேண்டும். தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இந்தியா–இலங்கைகுழுவினர்பேச்சுவார்த்தையில் ஈடுபட உள்ளனர்” என்று கூறினார்.

# தமிழக இஸ்லாமிய அமைப்புகளை தம் பக்கம் இழுக்கின்றார் எடப்பாடி!

பா.ஜனதாவுடனான கூட்டணி முறிந் ததை அடுத்து அ.தி.மு.க. அணியை பலப்படுத்துவதில் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தீவிரமாக ஈடுபட் டுள்ளார்.

பா.ஜனதாவுடன் கூட்டணியில் இருந்த போது சிறுபான்மையினர் வாக் குகள் கிடைக்கவில்லை என்ற எண்ணம் அ.தி.மு.க. தரப்பில் உள்ளது.

மேலும் தி.மு.க. வெற்றிக்கு கைகொடுப்பது சிறுபான்மையினர் வாக்குகள்தான், அதை தங்கள் பக்கமும் இழுக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு காய்களை நகர்த்தி வரு கிறார்கள். அதற்காகவே கோவை குண்டு வெடிப்பு வழக்கில் சிறையில் இருக்கும் முஸ்லிம் கைதிகளை விடுதலை செய் வதற்காக எடப்பாடி பழனிசாமி சட்ட சபையில் குரல் எழுப்பி னார். சிறைகளில் இஸ்லாமிய கைதிக ளின் வழிபாட்டு உரிமை மறுக்கப் படுவதாகவும் குற்றம் சாட்டினார்.

பா.ஜனதா கூட்டணியில் இருந்து வெளியேறிய பிறகு இஸ்லாமியர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பது, தி.மு.க. வுக்கு எதிரான நிலைப்பாடு, அந்த கூட்டணியில் இடம்பெற முடியாத நிலைமை கொண்ட கட்சிகள் அ.தி.மு.க. வுக்கு ஆதரவாக மாறி உள்ளன.

மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி எடப்பாடி பழனி சாமியை சந்தித்து பேசினார். ஏற்கனவே ஜெயலலிதா உயிருடன் இருந்த போது நாகப்பட்டினம் தொகுதியில் போட்டியிட அவருக்கு வாய்ப்பு வழங்கியது குறிப் பிடத்தக்கது.

இப்போது பா.ஜனதா உறவை முறித் தமைக்கொபாராட்டுதெரிவித்தமையோடு இஸ்லாமிய சிறை கைதிகளுக்கு ஆதரவாக பேசியமைக்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டார்.

இதே போல் எஸ்.டி.பி.ஐ.ஒ.வை.சி. கட்சியினரும் சந்தித்து ஆதரவு தெரிவித்து உள்ளனர். இது தவிர சிறு, சிறு அமைப்புகளும் சந்தித்து ஆதரவு தெரிவித்து வருகின்றன. ஹஜ் லைபர் சொசைட்டி அமைப்பின் தலைவர் செய்யது ஜப்பார், ஜனநாயக முஸ்லிம் மறு மலர்ச்சி கழக தலைவர் ஹாஜி சலாமுதீன் உள்பட 6 அமைப்புகளை சேர்ந்த நிர்வாகிகள் சந்தித்து உள்ளனர்.

மேலும் சில அமைப்புகள் சந்திப்ப தற்கு நேரம் கேட்டு உள்ளன எனக் கூறப்படுகிறது. ஆதரவு தெரிவித்த அமைப்புகளுக்கு நன்றி தெரிவித்துக் கொண்ட எடப்பாடி பழனிசாமி இந்த அமைப்புகள் மூலம் இஸ்லாமியர்கள் மத்தியில் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக பேசுவதற்கு வியூகம் வகுத்து கொடுத்து உள்ளார். தான் பேசுவதை விட இஸ்லாமிய அமைப்புகளே இஸ்லாமியர் கள் மத்தியில் நிலைமைகளை விளக்கி னால் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக திரும்புவார்கள் என்று கருதுகிறார்.

மேலும் இந்த அமைப்புகளை கூட்டணியில் இணைத்து ஒருசில தொகுதிகள் வழங்கவும் எடப்பாடி பழனிசாமி திட்டமிட்டு இருப்பதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.